**செப்டம்பர் – 07**

# TNPSC துளிகள்

- கலாச்சாரம், வணிகம் மற்றும் கல்வியாளர்களுக்கிடையேயான ஊடாடல்கள் போன்றவற்றில் இருநாட்டு ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான ஒப்பந்தத்தில் ஜப்பானும் குஜராத்தும் கையெழுத்திட்டுள்ளன.
- தெலுங்கானா முதலமைச்சர் கே.சந்திரசேகர ராவ் மற்றும் அவரது அமைச்சரவைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தெலுங்கானாவின் முதல் மாநில சட்டசபையானது அதன் காலவரம்பு முடிவதற்கு 9 மாதங்களுக்கு முன்னரே கலைக்கப்பட்டது. இது மாநிலத்தில் முன்கூட்டியே தேர்தல் நடத்துவதற்கு வழி வகுக்கும்.
- டாக்டர். பூனம் சிங் அவர்கள் உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியப் பிராந்திய இயக்குனராக இரண்டாவது முறையாக மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
    - உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் பிராந்திய இயக்குநர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் இவராவார்.
- ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (Rural infrastructure Development Fund - RIDF) கீழ் மேற்கு வங்கத்திற்கு ரூ.335 கோடி தொகையை விவசாயம் மற்றும் ஊரக மேம்பாட்டுக்கான தேசிய வங்கியானது (NABARD – National Bank for Agriculture and Rural Development) ஒதுக்கியுள்ளது.
    - இது 158 சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் 23 வெள்ளப் பாதுகாப்புத் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படும்.
- உலகில் மிகவும் மதிப்புமிக்க கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் ஒன்றாகக் கருதப்படும் ஃபிபா (FIBA - International Basketball Federation) 3 x 3 (சர்வதேசக் கூடைப்பந்து சம்மேளனம்) வேர்ல்டு டூர் மாஸ்டர்ஸ் போட்டியை இந்தியா நடத்தவிருக்கிறது.
- மகாத்மா காந்தியின் உருவச் சிலையை சோபியாவின் சவுத் பார்க் என்ற இடத்தில் இந்திய ஜனாதிபதியும் பல்கேரிய அதிபரும் இணைந்து திறந்து வைத்தனர்.
- கென்யாவின் மராலால் நகரில் 2018ஆம் ஆண்டிற்கான சர்வதேச ஒட்டகப் பந்தயம் நடைபெற்றது. இது, உள்ளூர் மற்றும் சர்வதேசப் போட்டியாளர்களை ஈர்க்கக் கூடிய மிகவும் மதிப்புமிக்க மற்றும் கென்யாவின் மிகவும் புகழ்பெற்ற விளையாட்டாகும்.
- BSNL நிறுவனம் இந்திய குத்துச்சண்டை வீரர் M.C. மேரிகோமை இரண்டு வருடங்களுக்குத் தனது விளம்பரத் தூதராக நியமித்துள்ளது.
- இந்தியாவும் பல்கேரியாவும் முதலீடு, சுற்றுலாத்துறை, அணுசக்தி ஒத்துழைப்பு மற்றும் சோபியா பல்கலைக்கழகத்தில் ஹிந்தி பயிற்சியை ஆரம்பித்தல் போன்ற விவகாரங்களின் மீது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்திய இரயில் துறையில் மின்னணுப் போக்குவரத்து (Electric Mobility) என்ற தலைப்பிலான மாநாடு டெல்லியில் நிதி ஆயோக்குடன் இணைந்து இரயில்வேயின் மின்சாரப் பொறியாளர்கள் நிறுவனத்தின் மூலமாக மத்திய இரயில்வே அமைச்சகத்தால் நடத்தப்பட்டது.
- இந்தியா முழுவதும் உள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் அடோப் டிஜிட்டல் திஷா என்ற திட்டத்தை ஆரம்பிக்க மென்பொருள் வல்லுநரான அடோப் நிறுவனம்

திறன்மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- இந்திய கடற்படைக்கு ஏழு நீண்டதூர தரையிலிருந்து ஆகாயத்திற்கான ஏவுகணைகளை தயாரித்து அளிப்பதற்கான 9200 கோடி ரூபாய் மதிப்பிலான வாய்ப்பை அரசு நிறுவனமான பாரத் எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் பெற்றுள்ளது.
- இந்தியா, ஜப்பானிடமிருந்து 7000 கோடி ரூபாய் மதிப்பிலான 18 புல்லட் இரயில்களை வாங்கவிருக்கின்றது. இந்த ஒப்பந்தம், இரயில்களை உள்ளூரில் தயாரிக்க உதவும் தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கான உத்தரவாதத்தையும் கொண்டிருக்கும்.
  - இது 2022ம் ஆண்டிற்குள் நாட்டின் முதல் உயர்வேக இரயில் பாதையை நிறுவிடத் திட்டமிட்டுள்ள அரசாங்கத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- மத்திய அரசு பிரதான் மந்திரி ஜன்தன் யோஜனா திட்டத்தை ஒரு திறந்த முறைத் திட்டமாக மாற்ற முடிவெடுத்துள்ளது. மேலும் மக்கள் வங்கி கணக்குகளை துவக்குவதை ஊக்குவிக்கும் வகையில் மேலும் பல சலுகைகளை இதில் சேர்த்துள்ளது.
  - அரசு மிகைப்பற்று வசதியை ரூபாய் 5000லிருந்து 10,000 ரூபாய் அளவிற்கு உயர்த்தியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## கங்கையை தூய்மைப்படுத்துதலுக்கான புது சட்டம்

- ஆயுதம் ஏந்திய கங்கை பாதுகாப்புப் படையை அமைக்க முன்மொழியும் சட்ட வரைவை மத்திய நீர்வளம், நதிகள் மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகமானது தயாரித்துள்ளது.
- இந்தப் படையானது, கங்கை நதியை அசுத்தப்படுத்தும் குற்றத்தை செய்பவர் எவராக இருந்தாலும் கைது செய்து இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும் அதிகாரம் கொண்டதாகும்.
- தேசிய கங்கை குழு மற்றும் தேசிய கங்கை புனரமைப்பு ஆணையம் ஆகிய இரண்டும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி கங்கை நதியைப் பாதுகாக்க இந்தச் சட்ட வரைவானது எண்ணுகின்றது.

## இபிகோ பிரிவு 377 மீதான தீர்ப்பு

- ஐந்து நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு, இந்திய தண்டனைச் சட்டத்தின் (Indian Penal Code - IPC) 377வது பிரிவில் உள்ள பிரிட்டிஷ் காலத்திய விதிகளின் ஒரு பகுதியை ஓரளவிற்கு ரத்து செய்து, ஓரினச் சேர்க்கையை குற்றவிலக்குடைய நடவடிக்கை ஆக்கியுள்ளது.
- இத்தீர்ப்பின்படி, பிரிவு 377 ஆனது ஓரினச் சேர்க்கையாளர்கள், எதிர்பாலினச் சேர்க்கையாளர்கள், பெண்களிடையே பாலுறவு கொள்பவர்கள் மற்றும் பாலியல் சிறுபான்மையினர்கள் ஆகியோருக்கிடையே ஒப்புதலுடன் ஏற்படும் தன்பாலின நடவடிக்கைகளுக்கு பொருந்தாது.




- ஆனால் இது விலங்குப் புணர்வு முறைக்கோ அல்லது ஒப்புதலின்றி யாரோடும் மேற்கொள்ளும் பாலியல் செயல்களுக்கோ பொருந்தும்.
- ஓரினச் சேர்க்கையை குற்றவிலக்கில் கொண்டு வந்த நாடுகளில் இந்தியா 125வது நாடாக அமைந்தது.


# சர்வதேசச் செய்திகள்

## SLINEX - 2018

- இலங்கை கடற்படையும் இந்தியக் கடற்படையும் இணைந்து நடத்திய SLINEX-2018 என்ற கூட்டுப் பயிற்சி செப்டம்பர் 7 முதல் 13 வரை திரிகோண மலையில் நடைபெற்றது.
- முன்பு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்ற இப்பயிற்சியானது தற்பொழுது வருடாந்திர நிகழ்வாக, இந்த வருடம் முதல் மாற்றப்பட்டுள்ளது.
- இரண்டு கடற்படைகளுக்கும் நடுவே பரஸ்பர நம்பிக்கை மற்றும் இணைந்து செயலாற்றும் தன்மையை அதிகரிக்கவும் கடற்சார் பகுதியில் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் இது உதவிடும்.
- துறைமுகப் பகுதி மற்றும் கடல்பகுதி என இரு கட்டங்களாக இப்பயிற்சி நடத்தப்படும்.

## PISA - 2021

- மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் 9 வருட இடைவெளிக்குப் பிறகு சர்வதேச மாணவர் மதிப்பீட்டுத் திட்டத்தில் (Programme of International Student Assessment – PISA) பங்கேற்க அலுவல்பூர்வமாக முடிவெடுத்துள்ளது.
- பிரான்சின் பாரீசில் உள்ள பொருளாதார ஒத்துழைப்பு மேம்பாட்டு நிறுவனத்தால் (Organization for Economic Cooperation and Development – OECD) ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் 15 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான மதிப்பீட்டு நடைமுறையே PISA மதிப்பீடாகும்.




## ASEM மாநாடு

- 3வது ASEM (Asia Europe Meeting) என்கிற ஆசிய ஐரோப்பிய சந்திப்பு மாநாடு "உலகளாவிய முதியோர் மற்றும் வயதானவர்களுக்கான மனித உரிமைகள்" என்ற தலைப்பின் கீழ் தென்கொரியாவின் சியோல் நகரத்தில் நடத்தப்பட்டது.
- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது இந்திய அணிக்கு தலைமை தாங்கியது. மேலும் சர்வதேச நிறுவனங்களான ஐ.நா. சபை, பிராந்திய அமைப்புகளான UNESCAP (UN Economic and Social Commission for Asia and the Pacific), UNECE (United Nations Economic Commission for Europe), ஐரோப்பிய ஒன்றியம், ஆசியான், GANHRI (Global Alliance for National Human Rights Institutions) மற்றும் இதர சர்வதேச அரசு சாரா அமைப்புகளும் இம்மாநாட்டில் பங்கேற்றன.
- இம்மாநாடு, கொரியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தாலும் தென்கொரியாவாலும் கூட்டாக இணைந்து நடத்தப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## போர் விமானத்திற்கு நடுவானில் மறுஎரிபொருள் நிரப்புதல்

- இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட தேஜாஸ் என்ற இலகுரக போர் விமானத்திற்கு நடுவானில் மறுஎரிபொருள் நிரப்பும் பணியானது முதன்முதலாக இந்திய விமானப் படையால் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.
- இரஷ்யாவால் கட்டமைக்கப்பட்ட IL – 78 MKI எரிபொருள் நிரப்பு விமானமானது தேஜாஸ் MK-I விமானத்திற்கு எரிபொருளைக் கடத்தியது.



- இந்தச் சோதனையானது dry linkup முறையைக் கொண்டு நடத்தப்பட்டதாகும். dry linkup என்பது இந்திய விமானப் படையின் IL-78 எரிபொருள் நிரப்பு விமானம் மற்றும் தேஜாஸ் போர் விமானங்களுக்கிடையே உண்மையில் எவ்வித எரிபொருளும் கடத்தாமல் சோதித்துப் பார்க்கப் பட்டது.

### முதல் வெளிநாட்டு நிலக்கட்டுப்பாடுத் தளம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகமானது (ISRO) வடதுருவத்தில் முதல் வெளிநாட்டு தரைக்கட்டுப்பாட்டு நிலையத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.
- இது, பேரிடர் மேலாண்மை மற்றும் இராணுவப் படைகளின் செயல்பாடுகள் போன்ற முக்கியத் தேவைகளுக்குப் பயன்படும் இந்திய தொலைதூர உணர்திறன் நடவடிக்கைகளை வலுப்படுத்தும்.
- இந்தத் தரைக் கட்டுப்பாடு நிலையமானது அதே சுற்றுவட்டப் பாதையில் உள்ள முழுமையான தரவுகளை பதிவிறக்கம் செய்வதற்கும் ஒவ்வொரு சுற்று வட்டப் பாதையிலும் அங்கேயே உள்ள உள்வளங்களைப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பு அளிக்கும்.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### இந்தியாவின் 46வது தலைமை நீதிபதி

- தீபக் மிஸ்ராவைத் தொடர்ந்து இந்தியாவின் 46வது தலைமை நீதிபதியாக ரஞ்சன் கோகாய் அக்டோபர் மாதம் 3ம் தேதி பதவியேற்கவுள்ளார்.
- தற்போதைய இந்தியத் தலைமை நீதிபதி அவர்கள் மிகவும் மூத்த நீதிபதியான ரஞ்சன் கோகாயை அவருக்கு அடுத்த தலைமை நீதிபதியாக பரிந்துரைத்துள்ளார்.
- ஓய்வு பெறவிருக்கும் தலைமை நீதிபதி அவருக்கு அடுத்து அப்பதவிக்கு பின் தொடருபவரின் பெயரை ஓய்வு பெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே பரிந்துரைக்க வேண்டும் என்பது நடைமுறை வழக்கமாகும்.
- வடகிழக்குப் பகுதிகளில் இருந்து தலைமை நீதிபதியாகும் முதல் நபராக கோகாய் உள்ளார்.



- நவம்பர் மாதம் 17ஆம் தேதி அன்று 2019ஆம் ஆண்டு அவரது பதவிக் காலம் முடியும் வரை அவர் தலைமை நீதிபதியாக பதவி வகிப்பார்.

# விளையாட்டுச் செய்திகள்

## RSL கார்கிவ் சர்வதேச போட்டி - பாட்மின்டன்

- உக்ரைன் நாட்டின் கார்கிவ் நகரத்தில் நடைபெற்ற RSL கார்கிவ் சர்வதேச போட்டியில் கலப்பு இரட்டையர் பிரிவிற்கான கோப்பையை இளம் இந்திய இறகுப் பந்து வீரர்களான (பேட்மின்டன்) அனொஸ்கா மற்றும் சௌரப் சர்மா வென்றுள்ளனர்.
- மேலும் கிருஷ்ண பிரசாத் கராகா மற்றும் துருவ் கபிலா ஜோடி ஆடவர் இரட்டையர் பிரிவில் கோப்பையை வென்றனர்.

- - - - - - - - - - - - - - -